# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 23 புதன்கிழமை 08.05.2024 கதிர் 251



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




# சர்வதேச கடன் மறுசீரமைப்பிற்கு பெரும் தடையாக சீனாவின் இறுக்கமான நிலைப்பாடுதான் உள்ளது!

## லேர்ன் ஏஷியா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தெரிவிப்பு



**சர்வதேச கடன் மறுசீரமைப்பிற்கு மிகப்பெரிய தடையாக இருப்பது சீனாவின் இறுக்கமான நிலைப்பாடாகும், என லேர்ன் ஏஷியா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் ரொஹான் சமரஜீவ தெரிவித்துள்ளார்.**

**ஏனைய திவாலான நாடுகளுடன் ஒப்பிடுகையில், சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தில் இலங்கை விரைவான முன்னேற்றம் கண்டுள்ளது, ஆனால் சீனாவின் இறுக்கமான நிலைப்பாடு காரணமாக வெளிநாட்டு மறுசீரமைப்பு வேலைத்திட்டம் இன்னும் உடன்பாட்டிற்கு வரவில்லை என பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.**

2➤



# அஸ்ட்ராஸெனெக்கா கொவிட் தடுப்பூசி மருந்து உலகம் முழுவதுமிருந்து மீளப்பெறப்படுகிறது!

பிரித்தானியாவைத் தளமாகக்கொண்ட மருந்து தயாரிப்பு நிறுவனமான அஸ்ட்ராஸெனெக்கா தனது கொவிட் - 19 தடுப்பூசி மருந்துகளை உலகம் முழுவதும் இருந்து மீளப்பெறுவதற்கு தீர்மானித்துள்ளது.

அஸ்ட்ராஸெனெக்காவின் கோவிட்-19 தடுப்பூசி, அரிதான மற்றும் ஆபத்தான பக்க விளைவை ஏற்படுத்தும் என்று நீதிமன்ற ஆவணங்களின் ஊடாக அண்மையில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்நிலையிலேயே, உலகம் முழுவதும் இருந்து தடுப்பூசிகளை மீளப்பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த தடுப்பூசி மருந்து இனி தயாரிக்கப்படவோ அல்லது விநியோகிக்கப்படவோ மாட்டது, என நிறுவனம் அறிவித்துள்ளாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தடுப்பூசிகளை மீளப்பெறுவதற்கான விண்ணப்பம் மார்ச் ஐந்தாம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், நேற்று முதல் அது நடைமுறைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# தமிழர் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக ஆளுநர் செயலகம் முன் போராட்டம்



மகாவலி அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பை நிறுத்தக் கோரி கொக்குதொடுவாய், கொக்கிளாய் மற்றும் கருநாட்டுக்கேணி பிரதேச மக்கள் யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாண ஆளுநர்செயலகத்துக்கு முன்பாக இன்று காலை 10 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதையடுத்து அந்தப் பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு கண்காணிப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

"மகாவலி எனும் பெயரில் தமிழர்களின் பூர்வீகக் காணிகளை அபகரிக்காது மகாவலி திட்டத்தை எமது மண்ணில் நிறுத்து, எமது வாழ்வாதாரத்தைப் பறிக்காதே, மகாவலி அபிவிருத்தி முல்லைதீவில் பௌத்த மயமாக்கலுக்கா?, எமக்கு நீதி வேண்டும், மகாவலி திட்டத்தை எமது மண்ணில் நிறுத்து" என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். போராட்டத்தின் முடிவில் மகாவலி நில ஆக்கிரமிப்பு தொடர்பாக ஆளுநரின் செயலாளரிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது. (அ)




# எம்.பி. பதவியை இழந்தார் டயானா

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா

2➤

# தங்க விலையில் அதிகரிப்பு!



இலங்கையில் 22 கரட் தங்கப் பவுணொன்றின் விலை 179,400 ஷரூபாவாகப் பதிவாகியுள்ளது.

இலங்கையில் அண்மைய மாதங்களில் தங்கத்தின் விலையில் எதிர்பாராத அளவுக்கு அதிகரிப்பு ஏற்பட்டு இரண்டு இலட்சத்தைத் தொட்டிருந்தது.

ஆயினும், அண்மையில் இது சடுதியான வீழ்ச்சியைச் சந்தித்திருந்த நிலையில் மீண்டும் தற்போது அதிகரிக்கும் தன்மை காணப்படுகிறது.

இதன்படி, இன்றைய

2➤

## தங்க விலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தினம் 24 கரட் - 1 கிராம் தங்கத்தின் விலையானது 24,460 ரூபாவாகவும், 24 கரட் தங்கப் பவுணொன்றின் விலை 195,650 ஷரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அத்துடன் 22 கரட் - 1 கிராம் தங்கத்தின் விலை 22,430 ரூபாவாகவும், 22 கரட் தங்கப் பவுணொன்றின் விலை 179,400 ஷரூபாவாகவும் காணப்பட்டது.

மேலும், 21 கரட் -1 கிராம் தங்கத்தின் விலை 21,410 ரூபாவாகவும், 21 கரட் தங்கப் பவுணொன்றின் விலை 171,250 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (04)

## எம்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கமகேவின் நாடாளுமன்ற உறுப்புரிமை பதவியை வறிதாக்கி உயர்நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

இரட்டைக் குடியுரிமை தொடர்பான வழக்கிலேயே அவருக்கு இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சமூக செயற்பாட்டாளர் ஓஷல ஹேரத் என்பவரால் இது தொடர்பில் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக நாடாளுமன்றம் வந்துவிட்டு, பின்னர் ஆளுங்கட்சி பக்கம் டயானா கமகே தாவினார். அவர் சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை டயானா கமகே நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதன் காரணமாக வெற்றிடமாகவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானை நியமிக்க ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச தீர்மானித்துள்ளார்.

அதன்படி முஜிபுர் ரஹ்மானின் பெயர் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பப்பட உள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவான முஜிபுர் ரஹ்மான், உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மேயர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்காக அந்தப் பதவியை இராஜினாமாச் செய்திருந்தார். (அ,04)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சீனாவின் இந்த இயல்பானது இலங்கைக்கு மட்டுமின்றி உலக நாடுகளுக்கும் பொதுவானது எனவும், கடனை செலுத்த அவர்கள் சலுகை வழங்குவதில்லை, எனவே இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் சர்வதேச நாணய நிதியம் சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் ஒப்பிடுகையில் செம்பியா, சுரினாம் மற்றும் லெபனான் போன்ற நாடுகளின் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் மந்தகதியில் காணப்படுவதாகவும், அவற்றுள் லெபனான் இந்த திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் விரிவான கடன் வசதி திட்டம் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் காரணமாக முதலீட்டாளர்கள் இலங்கைக்கு சாதகமான பிரதிபலிப்பை காட்டுவார்கள் எனவும், மறுசீரமைப்பு செயல்முறையில் உடன்பாடுகளை எட்டியதன் பின்னர், இருதரப்பு செயற்றிட்டங்களை மேற்கொள்ள முடியும் எனவும் 2023 ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கியின் வருடாந்த பொருளாதார அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-31)



## மின் கட்டணக் குறைப்புக்கான முன்மொழிவுக்கு காலவகாசம்

மின் கட்டணக் குறைப்பு தொடர்பான முன்மொழிவுகளை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி இந்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும், இலங்கை மின்சார சபை அதற்கு கால அவகாசத்தை கோரியிருந்த நிலையில்

எதிர்வரும் 10ஆம் திகதி வரை முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

குறித்த முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் மின் கட்டணங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, மின் கட்டணங்களைக் குறைப்பது தொடர்பான விபரங்களை ஜூலை மாதத்தில் அறிவிக்க முடியும் என இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (04)

## கையிருப்புச் சொத்துக்கள் 9.6 சதவீதத்தினால் உயர்வு

*இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்புச் சொத்துக்கள் ஏப்ரல் 2024 இல் 9.6 சதவீதத்தினால் உயர்ந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.*

*அதன்படி, மார்ச் 2024ல் 4.96 பில்லியன் டொலராக இருந்த அதிகாரப்பூர்வ கையிருப்புச் சொத்து மதிப்பு, 2024 ஏப்ரலில் 5.43 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.*

*இதேவேளை, நிதிப்பரிமாற்ற உடன்படிக்கையின் கீழ் சீனா வழங்கிய 1.4 பில்லியன் டொலர்களும் இதில் உள்ளடங்குவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.*

## தேசிய ஆசிரியர் பேரவைக்கு அமைச்சரவை அனுமதி

தேசிய ஆசிரியர் பேரவையை ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தொடர் தொழில் அபிவிருத்தி மூலம் ஆசிரியர்களின் தொழில்வாண்மை மற்றும் தரப்பண்புகளை அதிகரிப்பதற்காக ஏனைய தொழில் சேவைப் பிரிவுகள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு இணையாக, தேசிய ஆசிரியர் பேரவையைத் ஸ்தாபிப்பதற்கு தேசிய கல்விக் கொள்கைச் சட்டகத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, கல்வித்துறைசார் பங்காளர்களுடனான நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படைச் சட்டமூலத்தின் பிரகாரம், தேசிய ஆசிரியர் பேரவையை ஸ்தாபிப்பதற்கு சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு

ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி மற்றும் கல்வி அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## லிட்ரோ நிறுவனத்தினது புதிய எரிவாயு முனையம்

லிட்ரோ நிறுவனத்தின் புதிய எரிவாயு முனையமொன்று கடுவளை - மாபிம பகுதியில் இன்று திறந்துவைக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய எரிவாயு முனையத்திலிருந்து, நாளாந்தம் 60,000 எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்க முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள கெரவலப்பிட்டிய எரிவாயு முனையத்தின் ஊடாக நாளாந்தம் ஒரு இலட்சம் சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றன.

எனினும், நாட்டின் எரிவாயுத் தேவையை பூர்த்தி செய்வதற்கு கெரவலப்பிட்டிய முனையம் மாத்திரம் போதாது என்பதனால், புதிய முனையத்தை நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (04)

## கடற்பரப்பில் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல்

*கொழும்பிலிருந்து காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் மீனவர்கள் மற்றும் கடல்சார் சமூகத்தினர் அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.*

*பொத்துவில் தொடக்கம் கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் கடல் அலைகள் 2.5 மீற்றர் (02–2.5) வரை உயரும் சாத்தியம் காணப்படுவதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*இதன் காரணமாக கொழும்பிலிருந்து காலி ஊடாக மாத்தறை வரையான பகுதிகளில் கடல் அலைகள் கரைக்கு வருவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் அதனால் கொழும்பில் இருந்து காலி மற்றும் ஹம்பாந்தோட்டை முதல் பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாக காணப்படும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*(ரெம-33)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் மருத்துவ தாதியர் தின நிகழ்வுகள்





(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் வைத்தியசாலையின் மருத்துவ மாதுக்களின் ஏற்பாட்டில் சர்வதேச மருத்துவத் ஓதாதியர் தினம் திங்கட்கிழமை அனுட்டிக்கப்பட்டது.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.பி அப்துல் வாஜித் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் எம்.எஸ். எம்.பாயிஸ், வைத்தியர்கள், தாதிய மேற்பார்வையாளர்கள், தாதியர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு திருமலையில் வாழ்வாதார உதவிகள்



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தில் பெண்கள் தலைமை தாங்கும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வருமானத்தைப் பெற்றுத் தரும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கோடு உதவிகள் வழங்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கமானது 11 குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ஒன்றரை இலட்சம் பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம், குழாய்கள் மற்றும் தூவல் நீர்ப் பாசனக் கருவிகளை ஒரு மாத காலப் பகுதியில் மூன்றாவது முறையாக இன்று வழங்கியது.

இவற்றை திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் வழங்கி வைத்தார்.

பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் இதன் மூலம் தங்களது அன்றாட ஜீவனோபாயத்துக்கான ஒரு ஊக்குவிப்பைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.






# மிதி வெடி




அரசியல் அராஜகம் எண்டது எல்லா இடமும் இருக்கிறது தான் பாருங்கோ. ஆனால் வடக்கில இருக்கிற ஆக்களிண்ர அடாவடி பெருந் தலையிடியாக் கிடக்குது போல...

அந்தக் காலத்தில ஆர், எவர்? எண்டில்லாமல் - தகுதி தராதரம் பாராமல் அரசியல் செல்வாக்கில அள்ளிப் போட்டதென்னவோ உண்மை தான். ஆனால், அந்தப் “பாச்சா” நெடுகப் பலிக்குமே?

ஆர் ஆட்சிக்கு வந்தாலும், தான் அமைச்சரா இருக்கிற ஒருத்தற்ற அல்லக்கைகள் அரசாங்க அலுவலகங்களைப் படுத்திற பாடு. பெரும் பாடு..!

வட்டம். மாவட்டம் எண்டு சொல்லிக் கொண்டு அரசாங்க அதிகாரிகளை மிரட்டி, அலுவலகங்களை அவைதானே நடத்துகினம்?

“அமைச்சர் சொன்னவர்”, “நீங்கள் ஒருக்கா வந்துட்டுப் போங்கோ” எண்டு தொடங்கி தங்கட அல்லக்கையளை வச்சு நலன்புரிச் சங்கம் நடத்துறது வரையும் இப்ப அவையள் தான்!

காத்துக் கழட்டி விட்டது போலக் கொஞ்ச நாள் அடக்கி வாசிச்சவை எல்லாருக்கும் இப்ப தேர்தல் வரப்போகுது எண்ட உடன் “ஜீவன்” வந்துட்டுது போல.

பெரிய ஆசுப்பத்திரியிலயும், பெரிய பள்ளிக் கூடத்திலயும் அளவு கணக்கில்லாமல் - தகுதி தராதரங்கள் இல்லாமல் இரவு பகலா கூட்டத்துக்கு ஆள் சேர்த்தது போல கொண்டு வந்து குவிச்சு “அப்பொயின்ற்மென்ற்” குடுத்த எல்லாரையும் வச்சு தொழில் சங்கம் ஆரம்பிச்சவை. அப்பிடியானவை ஆளாளுக்கு அடிபிடிப்பட்டதால சங்கங்கள் எல்லாம் செத்துப் போய்க் கிடந்தது.

இப்பக் கொஞ்ச நாளா “ஜீவன்” வந்து மறுபடியும் முழிச்சிற்றினம்.

“ஹொஸ்பிற்றல்” மாதிரியோ இல்லாட்டி “கம்பஸ்” மாதிரியோ இல்லாட்டிலும் பிரதேச செயலகங்களில அங்கொண்டும், இங்கொண்டுமா விதைச்சதுகளை வைச்சும் அரசியல் செய்ய வெளிக்கட்டிருக்கினம்.

அண்மையில பிரதேச செயலகம் ஒண்டில அதிகார அம்மணியின்ர அனுமதி இல்லாமல் வேலை ஆக்களைக் கட்சிக் காரர் சந்திச்சிருக்கினம். அம்மணி கொஞ்சம் கடுப்பாகி, அமைச்சரின்ர செயலாளரா இருக்கிற அம்மணிக்கு “கோல்” எடுத்து அழுதிருக்கிறார்.

“அமைச்சர் என்ன செய்யுறதெண்டாலும் நான் என்ன தடையே? எதை எண்டாலும் எனக்குள்ளால செய்யலாமே? எண்டு கெஞ்சியிருக்கிறார்.

செயலான அம்மணியும் “ஓம். ஓம்

அமைச்சர் தேவையெண்டா எனக்குள்ளால தான் கதைப்பார். நீங்கள் மாவட் டத்தைக் கணக்கெடுக்காதேங்கோ. எண்டு சொல்லியிருக்கிறார்..

ஆனாலும், மாவட்டம் அடங்கேல்லயாம்.!

இதேமாதிரித் தான் இன்னுமொரு சம்பவமும் நடந்திருக்குது, இன்னொரு அலுவலகத்தில..

அந்த அலுவலகத்தில ஒப்பந்த அடிப்படையில வேலை செய்யுற நாலு பொம்பிளையளால நெடுகத் தலையிடியாம்.. ஆக்கள் வலு கில்லாடிகளாம. அங்க இருக்கிற அதிகாரிகளை வளைச்சுப் போட்டுத் தங்கட இஷ்டத்துக்கு ராச்சியம் நடத்தியிருக்கினம். அவையளுக்குள்ளயும் அடிக்கடி அடிபிடி!

உருட்டுறது தான் உறுட்டுறது எத்தினை நாளைக்குத் தான் உருட்டுறது? கொஞ்ச நாளில எல்லாம் வெ(அ)லுத்துப் போனதால அதிக நாள் நிண்டு பிடிக்கேலாமல் போச்சுது போல. அதிகாரிகளும் கைவிட்டதால அவையள்ள ஒராளுக்கெதிராக நிர்வாகம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்குது.

வழமை போல சாம-பேத-தான-தண்டங்களப் பின்பற்றி தனக்கெதிரான நடவடிக்கைய இல்லாமல் செய்யப் பாத்திருக்கிறார். ஒரு வழியும் சரி வரேல்ல.

ரெண்டு நாள் வேலைக்கு வரக் கூடாது எண்டு நிப்பாட்டுப்பட்டவா, அடுத்த நாளே வந்து “தோழர் சொன்னவர் சைன் வைக்க விடட்டாம்” எண்டிருக்கிறார். அந்த அலுவலகத்தின்ர தலைமை அதிகாரி மசியேல்ல. அடுத்த கட்டம் அங்க இருந்து, அந்த அதிகாரிக்கு அழைப்பு “அவாவை சைன் பண்ண விட்டுட்டு என்னை வந்து சந்தியுங்கோ. “ இடையில “அமைச்சர் தான் விடச் சொன்னவர்” எண்டும் சொல்லி இருக்கிறார்.

விசியம் இப்ப செயலான அம்மணி மூலமா அமைச்சற்ற காதுக்குப் போயிட்டுது. அமைச்சர் என்ன சொல்லப் போறார் எண்டு எல்லாரும் “வெயிற்றங்”!

பாப்பம்.. நாங்களும் பொறுத்தருந்து தான் பாப்பமே?

அரச அலுவலகங்கள் சுயாதீனமா இயங்க அமைச்சர் அனுமதிக்கப் பேறாரா? அல்லது என்ன பிழை விட்டாலும் தன்ர பரிவாரங்களுக்காகத் தன்ர பெயரையும் சேர்த்துப் பாழாக்கப் போறாரா எண்டு..

தர்மதேவதை என்ன தீர்ப்புச் சொல்லப் போகுதோ.?

“ஐ ஆம் வெயிற்றிங்.

நரமுனி

# நாடாளுமன்ற கட்டட புனரமைப்பு பணிகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலா பிட்டிய



நாடாளுமன்ற கட்டடத்தின் புனரமைப்பு பணிகளை உடனடியாக ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலா பிட்டிய தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

40 வருடங்கள் பழமையான இந்த நாடாளுமன்ற கட்டடத்திற்கு தற்போது சில புனரமைப்புபணிகள்தேவைப்படுவதாகவும், அதற்கேற்ப, அவசரமாக புனரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, புனரமைப்பு பணிகளை ஆரம்பிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற கட்டடத்தை புனரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளமை ஆச்சரியப்படுவதற்கு இல்லை எனவும் இது தொடர்பில் அரசாங்கத்தினதும் நாடாளுமன்றத்தினதும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் ராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அதன்படி, கடந்த 25 ஆம் திகதியன்று சபாநாயகர் தலைமையில் நடந்த ஆலோசனைக்குழு கூட்டத்தில், புனரமைப்பு பணிகளுக்கு உடனடியாக செய்ய வேண்டிய பணிகள் கண்டறியப்பட்டு, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம் ஆகியவற்றின் பங்களிப்பில் பணிகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதிகளை உடனடியாக வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதாகவும் தேவைப்படுமாயின் மேலும் நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு சபாநாயகர், சபைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைக் கொண்ட ஆலோசனைக் குழு கொள்கை ரீதியான உடன்பாட்டை எட்டியதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ரெம-27)



# சிகிரியாவின் குன்று வரையான பயண வீதியை இரட்டைப் பாதையாக விஸ்தரிக்க நடவடிக்கை

உலகப் புகழ்பெற்ற சிகிரியாவின் நுழைவாயிலிலுள்ள சிங்கபாதத்திலிருந்து பாறையின் குன்று வரை அமையப்பெற்றுள்ள தற்போதைய பாதையை இரட்டைப் பாதையாக விஸ்தரிப்பதற்கு மத்திய கலாசார நிதியம் திட்டமிட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி ரணசிங்ஹ தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "அதிக சுற்றுலா பயணிகளின் வருகை காரணமாக ஏற்படுகின்ற இட நெரிசலை சீர்படுத்தும் நோக்கிலேயே இவ்வாறு இரட்டை பாதையை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது, இதன் மூலம் அங்கு நெரிசல் நிலை 50% ஆக குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதுமட்டுமல்லாமல், சிகிரியா குன்றும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதுடன், இப்பகுதியில் ஒரே நேரத்தில் சுமார் ஐநூறு சுற்றுலாப் பயணிகள் நடமாடுவதற்கு தேவையான இட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தென் கொரியாவின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டம் 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2027 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது" என்றார்.

(ரெம-28)

# 60 வயதில் ஓய்வு பெற்ற குறிப்பிட்ட சில அதிகாரிகளுக்கு தீர்வையற்ற முறையின் கீழ் வாகன இறக்குமதி அனுமதி

60 வயது பூர்த்தியடைந்து ஓய்வு பெற்ற அரச உயர் அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட நீதித்துறை அதிகாரிகளுக்கு இறக்குமதி தீர்வையற்ற முறையின் கீழ் வாகன இறக்குமதி உரிமங்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கட்டாய ஓய்வுக்கான வயது 65 ஆகவும், பின்னர் அது 60 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளதன் காரணமாக இந்தக்காலகட்டத்துள் 60 வயதில் ஓய்வு பெற்ற அதிகாரிகள் இந்த சலுகைக்கு தகுதி பெறுவார்கள்.

2022 ஜனவரி 06, திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை 02-2022 மூலம் கட்டாய ஓய்வு வயதை 65 ஆகவும், பின்னர் 2022 செப்டம்பர் 14 திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை 19ஃ2022 மூலம் கட்டாய ஓய்வு வயதை 60 ஆகக் குறைக்கப்பட்ட இடைப்பட்ட காலத்தில் 60 வயதை எட்டிய பின்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு மேற்படி தீர்வையற்ற வாகன இறக்குமதி சலுகை பொருந்தும்.

மார்ச் 11 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான சுற்றறிக்கையை பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரதீப்யசரத்ன வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ரெம-30)

# மருத்துவர்களுக்கான ஸ்டிக்கர்களை பாவிக்கும் போலி மருத்துவர்கள் குறித்து பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை

## அரச வைத்திய அதிகாரிகள் சங்க முறைப்பாட்டின் பிரதிபலிப்பு



வாகனங்களில் மருத்துவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரப்பூர்வ ஸ்டிக்கர்களை ஒட்டுதல், போலி சான்றிதழ்கள் மற்றும் பெயர் அட்டைகளை காட்டி மருத்துவர்களைப் போல் ஆள்மாறாட்டம் செய்யும் நபர்கள் குறித்து கவனம் செலுத்தி, அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் குழுவொன்று பொலிஸ் மா அதிபர் தேசபந்து தின்னகோனை சந்தித்து அவ்வாறானவர்களினால் ஏற்படும் ஆபத்துக்கள் தொடர்பில் விளக்கமளித்ததையடுத்தே மேற்படி நடவடிக்கைகளை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் வைத்தியர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இலச்சினையுடன் கூடிய ஸ்டிக்கரை துஷ்பிரயோகம் செய்து சில சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு இதன் போது வைத்தியர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

போலி சான்றிதழ்களை வைத்துக் கொண்டு வைத்தியர்களாக நடித்து மருத்துவ நிலையங்களை நடத்துபவர்கள் மற்றும் வைத்தியர்கள் போல் வேடமணிந்து சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கவும் பொலிஸ் மா அதிபர் உத்தேசித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ரெம-29)

# இலங்கையின் பெருமையாக இருந்தவர்கள் இன்று கூலிப்படையினராக மாறியுள்ளனர்!

## ஜெனரல் சவேந்திர சில்வா அறிக்கை



தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தவர்களே இன்று வெளிநாடுகளில் கூலிப்படையாக செயற்படுவதாக பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள் வெளிநாடுகளில் கூலிப்படையாக இணைவதாக வெளியாகும் போலிப் பிரச்சாரங்களில் இருந்து விலகியிருக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம்தொடர்பாக அவர்வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்ஸ்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் - ரஷ்யப் போரில் இலங்கை இராணுவத்தின் முன்னாள் வீரர்கள் கூலிப் படைகளாக இணைந்து செயற்படுவதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அத்துடன், இந்தப் போரில் இலங்கையர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக சம்பளம், குடியுரிமை, உள்ளிட்ட போலி வாக்குறுதிகளோடு அழைத்துச் செல்லப்படுகின்ற விரர்கள், அங்கு கூலிப்படையாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் எமது தேசத்தின் பெருமையாக இருந்த இந்தப் படைவீரர்கள் இன்று போலியான வாக்குறுதிகளுக்கு அடிபணிந்துள்ளதாகவும், போர் வீரர்கள் மற்றும் தேசபக்தர்கள் என்று வரையறுக்கும் விழுமியங்களையும் அவர்கள் கைவிட்டுள்ளதாகவும் சவேந்திர சில்வா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கடமை, மரியாதை மற்றும் தாய்நாட்டிற்கான விசுவாச உணர்வு ஆகியவற்றால் இராணுவ வீரர்கள் கட்டுப்பட்டு இருக்கவேண்டும் என்றும் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஆனால், இன்று பணம் மற்றும் நிலையற்ற பெருமைக்காக தங்களின் விசுவாசத்தை கைவிடும்படி தூண்டப்படுவதாகவும், கூலிப்படை என்பது உன்னதமாக போர் நடவடிக்கை அல்ல என்றும் மாறாக இது ஆபத்தான பாதை என்றும் சவேந்திர சில்வா தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். (04)

## விஜயதாச ராஜபக்ஷவின் மனுவை அரச மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தது



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ செயற்படுவதை தடுத்து கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் பிறப்பித்த இடைக்கால உத்தரவை அமுல்படுத்துவதைத் தடுக்கும் உத்தரவை பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்த மனுவை நேற்று (07) விசாரிக்க அரச மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தது.

மனுதாரர் மாவட்ட நீதிமன்றத்தில் தேவையான உண்மைகளை நிஷரூபித்து, அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் எனவும், இந்த விஷயத்தில் தனது நீதிமன்றத்தின் தலையீடு பொருத்தமற்றது எனவும் சுட்டிக்காட்டிய மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டி. என். சமரகோன் மேற்படி மனுவை நிராகரித்தார்.

ஏப்ரல் 21ஆம் திகதி மொனார்க் இம்பீரியல் விழா மண்டபத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக தான் தெரிவு செய்யப்பட்ட நிலையில், தனது கட்சியின் செயற்பாட்டாளர்களான துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவன்ன மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரால் தனது நியமனத்திற்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்ட போது, அதனை ஒருதலைப்பட்சமாக பரிசீலித்த மாவட்ட நீதிமன்றம், இந்த இடைக்கால உத்தரவை பிறப்பித்தது என விஜயதாச ராஜபக்ஷ மேன்முறையீட்டு நீதிமன்றில் சுட்டிக்காட்டியிருந்தார்.

மனுதாரர் விஜயதாச ராஜபக்ஷ சார்பில் ஆரம்ப நிலையில் சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ரொமேஷ் டி சில்வா மூலம் விடயங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் சட்டத்தரணி சம்பத் பெரேரா, சட்டத்தரணி சதுர கல்ஹேன ஆகியோர் நேற்றைய தினம் முன்னிலையாகியிருந்தனர்.

பிரதிவாதி சார்பில் சட்டத்தரணி அகில திஸ ாநாயக்க உள்ளிட்ட வழக்கறிஞர்கள் குழுவுடன் சிரேஷ்ட சட்ட ஆலோசகர் புலஸ்தி ஷரூபசிங்க, ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தக ஜயசுந்தர மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி குவேர டி சொய்சா ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

(ரெம-32)

## ஸ்ரீ. சுதந்திரக் கட்சி என்பது குடும்ப சொத்து கிடையாது

### தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவுபட்டுள்ள அணிகள் ஒன்றுபட வேண்டும் எனவும், சந்திரிகா அம்மையாரும் இணைய வேண்டும் எனவும் அக்கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரான தயாசிறி ஜயசேகர எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“எனக்கு ஜனாதிபதியாக வேண்டும் என்ற கனவு இல்லை. எனக்கான தகுதி என்ன என்பது எனக்குத் தெளிவாகத் தெரியும். கட்சியைக் கட்டியெழுப்புவதே எனது நோக்கம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பது ராஜபக்ஷ குடும்பத்துக்கோ அல்லது பண்டாரநாயக்க குடும்பத்துக்கோ உரித்தானது அல்ல, அது மக்களின் கட்சி .

எனவே, பல அணிகளாகப் பிளவுபட்டுள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஒன்றுபட வேண்டும். அப்போதுதான் கட்சியை மீளக் கட்டியெழுப்ப முடியும்.

கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கென நடைமுறையொன்று உள்ளது. அந்த விதிமுறைகளைக் கருத்தில் கொள்ளாமலேயே மைத்திரிபால சிறிசேன தன்னிச்சையாக ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்துள்ளார்” - என்றார். (அ)




## கற்பிட்டியில் ஹஜ் பெருநாள் ரேஸ் மூன்றாம் பெருநாளன்று ஏற்பாடு

*(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)*

*கற்பிட்டியில் எதிர் வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு கே.ஆர்.சீ அமைப்பின் ஒழுங்கமைப்பில் கற்பிட்டி மக்களினால் பிரமாண்டமான முறையில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள மோட்டர் குரோஸ் ரேஸ், ஹஜ் பெருநாள் மூன்றாம் நாள் ( மூன்றாம் பெருநாள் தினம்) கற்பிட்டி தேத்தாவாடி ரேஸ் தரவையில் நடாத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கே.ஆர்.சீ அறிவித்துள்ளது.*

*அத்தோடு, இம்முறை இடம்பெற உள்ள மோட்டர் குரோஸ் போட்டியில் முதலிடம் பெறும் வெற்றியாளருக்கு ஒரு இலட்சம் ரொக்கப் பணம் பரிசாக வழங்கப்படும் எனவும் மோட்டர் சைக்கிள் வீரர்களிடம் நுழைவுக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.*

*போட்டியில் கலந்து கொள்வதற்காக வெளி இடங்களிவ் இருந்து வருகைதரும் வீரர்களுக்கான சகல வசதிகளும் செய்து கொடுப்பதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்வது என்ற தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.*

# மீள் மின் இணைப்பை 90 நாட்களுக்குள் பெற்றிடவேண்டும்! இல்லையெனில் மின்சாரம் முழுமையாக துண்டிக்கப்படும்!

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர தகவல்



மின் விநியோகம் துண்டிக்கப்பட்டு 90 நாட்களுக்குள் மீள் இணைப்பைப் பெற்றுக் கொள்ளாத மின்பாவனையாளர்களின் மின்கணக்கு இரத்துச் செய்யப்பட்டு மின் விநியோகம் முழுமையாகத் துண்டிக்கப்படும், என்றும்ஏ

மீள் மின் இணைப்புக்காக அறவிடப்படும் கட்டணம் தற்போது குறைக்கப்பட்டுள்ளது, எனவும் மின்சாரத்துறை மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (7) இடம்பெற்ற அமர்வின் போது எதிர்க்கட்சியின் உறுப்பினரான கெவிந்துகுமாரதுங்க முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தகவல் வழங்குகையில்,

2022 மே மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னரான காலப்பகுதியில் 70 இலட்சம் மின்பாவனையாளர்கள் மின் விநியோகக் கட்டமைப்பில் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

பல மணித்தியாலங்கள் மின்விநியோகத் துண்டிப்பு அமுல்படுத்தப்பட்டது. ஆட்சிமாற்றத்தைத்தொடர்ந்து, மின்கட்டமைப்பில் கொள்கை ரீதியில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

மின்விநியோகக் கட்டமைப்பின் கொள்கை திருத்தம் செய்யப்பட்டதால் தற்போது பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. கட்டணத்தைத் தொடர்ந்து குறைக்க முடியுமா? என்பது தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள யோசனை தொடர்பில் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம்.

சிவப்பு எச்சரிக்கைக் கட்டணப் படிவம் விநியோகிக்கப்பட்டு நிலுவைக் கட்டணம் செலுத்தாத சுமார் 10 இலட்சம் மின்பாவனையாளர்களுக்கான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

மின் விநியோகம் துண்டிக்கப்பட்டு 90 நாட்களுக்குள் நிலுவைக் கட்டணத்தைச் செலுத்தாவிடின் மின்விநியோகம் முழுமையாகத் துண்டிக்கப்பட்டு, மின்பாவனைக்கான கணக்கும் இரத்துச் செய்யப்படும்.

மின்கட்டணத்தைச் செலுத்தாத தரப்பினரை இலக்குவைத்து அவர்களுக்கான விநியோகத்தைத் துண்டிக்குமாறு எவருக்கும் பொறுப்பு வழங்கவில்லை.

கட்டணம் செலுத்தாவிடின் மின்விநியோகம் துண்டிக்கப்படும்! இது நான் அமைச்சரான பின்னர் எடுத்த தீர்மானமல்ல, காலம் காலமாகவே அமுல்படுத்தப்படுகிறது.

சிவப்பு எச்சரிக்கைக் கட்டணப் படிவம் வழங்கப்பட்டு, கட்டணம் செலுத்துவதற்கு காலவகாசம் வழங்கப்படும். அந்தக்காலப்பகுதிக்குள் கட்டணத்தைச் செலுத்தாவிடில்தான் மின் விநியோகம் துண்டிக்கப்படும்.

மின் விநியோகம் துண்டிக்கப்பட்டு, மீள இணைப்புப் பெற்றுக்கொள்ளப்படும் போது அறவிடப்படும் கட்டணமும் தற்போது குறைக்கப்பட்டுள்ளது, என்றார்.

# திருநெல்வேலியில் உள்ள பிரபல பல்பொருள் வாணிப நிலையத்திற்கு 150,000 ரூபா தண்டம்!

திருநெல்வேலி பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவினால் கடந்த பெப்ரவரி மாதம் திருநெல்வேலி பகுதியில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது திகதி காலாவதியான பொருட்கள், உரிய முறையில் சுட்டுத்துண்டு இடப்படாத பொருட்கள், வண்டுகள் மொய்த்துப் பழுதடைந்த பொருட்கள் என்பவற்றை விற்பனைக்காக வைத்திருந்த விற்பனை நிலைய உரிமையாளர் இனங்காணப்பட்டார்.

இதனையடுத்து குறித்த நிறுவன உரிமையாளரிற்கு எதிராக 20 குற்றச்சாட்டுகளுடன் யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் மார்ச் 18 ஆம் திகதி பொதுச் சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவனால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கினை நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துகொண்ட மேலதிக நீதவான் செ.லெனின்குமார், குறித்த நிறுவன உரிமையாளரைக் குற்றவாளியாக இனங்கண்டு, ரூபா 150,000 தண்டம் விதித்ததுடன் உரிமையாளருக்கு கடுமையான எச்சரிக்கையும் வழங்கினார். (04)








## சட்டவிரோத கொல்களம் சீல் வைத்து மூடப்பட்டது!

யாழ்ப்பாணம் மல்லாகம் பகுதியில் உரிய அனுமதிகள் இன்றி இயங்கி வந்த கொல்களம் நீதிமன்ற உத்தரவில் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

அதன் உரிமையாளர் நேற்றைய தினம் நீதிமன்றில் முன்னிலையானதை அடுத்து ஒரு இலட்சம் ஷரூபாய் சரீரப் பிணையில் செல்ல மன்று அனுமதித்தது.

மல்லாகம் பகுதியில் உரிய அனுமதிகள் இன்றி கொல்களம் ஒன்று இயங்கி வருவதாக சுகாதாரப் பிரிவினருக்கு திங்கட்கிழமை கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சுகாதார வைத்திய அதிகாரி பொலிஸாருடன் சம்பவ இடத்திற்குச் சென்றபோது அங்கிருந்து மாடு ஒன்றும் கன்று ஒன்றும் மீட்கப்பட்டன.

அத்துடன் மாடுகளை வெட்டப் பயன்படுத்தும் கூர்மையான ஆயுதங்கள் , மாடு கட்டும் கயிறுகள் உள்ளிட்டவற்றையும் அவர்கள் கைப்பற்றினர்.

மீட்கப்பட்ட சான்றுகளை மல்லாகம் நீதிமன்றில் பாரப்படுத்திய வேளை, மாட்டினையும் கன்றினையும் தெல்லிப்பழையில் உள்ள அன்பு இல்லத்தில் வைத்துப் பராமரிக்க உத்தரவிட்ட மன்று, கொல்களத்தின் உரிமையாளரை செவ்வாய்க்கிழமை மன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் நேற்றைய தினம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, உரிமையாளர் மன்றில் முன்னிலையானார்.

விசாரணைகளை அடுத்து அவரை ஒரு இலட்ச ஷரூபாய் சரீரப் பிணையில் செல்ல மன்று அனுமதித்தது.

அதேவேளை கொல்களத்தில் மாடுகள் கடத்தி வரப்பட்டு , இறைச்சியாக்கப்பட்டனவா? இறைச்சியாக்கப்பட்ட மாடுகள் திருடப்பட்ட மாடுகளா? பசு மாடுகளும் இறைச்சியாக்கப்பட்டுள்ளனவா? போன்ற விடயங்கள் தொடர்பில் விரிவான விசாரணைகளை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் மன்று உத்தரவிட்டுள்ளது. (01)

## கிளிநொச்சியில் கடும் வறட்சி குடிநீருக்குப் பெருந்தட்டுப்பாடு!



கிளிநொச்சி மாவட்டத்தில் கடும் வெப்பநிலையுடன் கூடிய வறட்சி காரணமாக பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 239 குடும்பங்களைச்சேர்ந்த 732 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் நல்லூர், செட்டியார்குறிச்சி, ஆலங்கேணி, ஞானிமடம், கொல்லக்குறிச்சி, மட்டுவில் நாடு கிழக்கு, பரமன் கிராய் போன்ற கிராம அலுவலர் பிரிவுகளைச்சேர்ந்த மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதி மக்கள் குடிநீருக்காகப் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவர்களுக்கான குடிநீரை பூநகரி பிரதேச சபை பௌஸர் மூலம் விநியோகித்து வருகிறது. (02)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்குங்கள்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்: தொலைபேசி ஊடாகவோ: WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!